
விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 09 ஞாயிற்றுக்கிழமை (24.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 05




# வடக்கு-கிழக்கு நிர்வாகம் தனித்தனியாகப் பிரிப்பு !

## ஆளுநர்களும் நியமிப்பு

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கென தனித்தனி ஆளுநர்களும் செயலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். நிர்வாகம் பிரிக்கப்பட்டு நேற்று முன்தினம் முதல் தனித்தனியாக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நிர்வாகப் பிரிப்பினால் வடக்கு கிழக்கு மாகாண சபைகளின் நிர்வாக அலகுகள் வடக்குக்குத் தனியாகவும் கிழக்குக்குத் தனியாகவும் பிரிக்கப்பட்டு உரிய நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறும் நாடுகளில் இலங்கைக்கு ஆறாவது இடம்

(புதுடில்லி)

தெற்காசிய நாடுகளிடையே மனித உரிமை மீறல்கள்-மீறும் நாடுகளில் இலங்கை 6 ஆவது இடத்தைப் பெற்றுள்ளதாக தெற்காசிய மனித உரிமைகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.தெற்காசிய அமைப்பில் ஏழு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதில் மனித உரிமை மீறல் விடயத்தில் ஆறாவது இடத்தை இலங்கை வகிப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் மனித உரிமைகள் ஆசிய நிலையத்தின் தலைவர் சுஹாஸ் சக்மா இலங்கையில் 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை மீறப்படுதல் காரணமாக தமிழர்கள் ,ஊடகவியலாளர்கள் ,அரசியல்வாதிகள் ,அப்பாவி மக்கள் ஆகியோர் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

தெற்காசிய மனித உரிமைகள் மீறல்களில் பூட்டான் முதலிடத்தை வகிக்கிறது. நேபாளம் மாலைதீவு ,பாகிஸ்தான் என்ற நாடுகள் இரண்டாம் இடத்தில் இருந்து 4ஆம் இடம் வரைக்கான இடத்தில் இருக்கும் அதே நேரம் இந்தியா ஏழாம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி இலங்கையில் தமிழ் ஊடகவியலார்கள் படையினராலும் ஆயுதக்குழுக்களாலும் ஜே.வி.பி.போன்ற குழுக்களாலும் இலக்கு வைக்கப்படுகிறார்கள். இந்த வகையில் இரண்டு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆறு பேர் உடல் ரீதியான வதைகளுக்கு உள்ளானார்கள். நான்கு ஊடகவியலாளர்கள் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளானார்கள் என தெற்காசிய மனித உரிமைகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-133)

## ஆணைக்குழுவின் செயற்பாடுகளை அவதானிக்க அமெரிக்கப் பிரதிநிதி

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் செயற்பாடுகளை அவதானிக்கும் சர்வதேச நிபுணர்குழுவிற்கு அமெரிக்க அரசாங்கமும் பிரதிநிதி ஒருவரை சிபார்சு செய்துள்ளது.

ஜீன் டிவே என்பவரே இக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டவராவார். இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை அடுத்தே அமெரிக்கா தனது பிரதிநிதியை சிபார்சு செய்துள்ளது.

எமது தெரிவாக ஜீன் டிவேயின் பெயரை இலங்கை அரசுக்கு பரிந்துரைத்துள்ளோம். ஆயினும் இது குறித்து இதுவரைக்கும் இலங்கை அரசின் பதில் எமக்குக்கிடைக்கவில்லை. நாம் தற்பொழுது எமது தெரிவு என மேற்படி நபரை இலங்கை அரசிற்கு பரிந்துரைத்துள்ளோம்.

இதற்கு இணங்கி இலங்கை அரசு தமது பதிவை எமக்கு அனுப்பிய பின்னரே ஜீன் டிவே இலங்கை வருவார் என அமெரிக்க தூதரகப்பேச்சாளர் தெரிவித்தார். அமெரிக்க அரசின் சனத்தொகை மற்றும் அகதிகள் விபரங்கள் தொடர்பாக பிரதி ராஜாங்க செயலாளராக பணியாற்றியுள்ள ஜீன்டி வே அமெரிக்க இராணுவத்தின் அரசியல் இராணுவப் பிரிவின் தலைவராக பென்டகனில் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## வாகரை மருத்துவமனையை நோக்கி மும்முனை எறிகணைத் தாக்குதல்கள்

வாகரை மருத்துவமனை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளை இலக்கு வைத்து படையினர் மும்முனைகளில் இருந்து செறிவான ஆட்லறி எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வாகரைக்கு வடக்காகவுள்ள திருகோணமலை கல்லாறு முகாமிலிருந்தும் வாகரைக்கு மேற்காகவுள்ள கரடிக்குளம் படை முகாமில் இருந்தும் தெற்காகவுள்ள வாழைச்சேனை படை முகாமில் இருந்தும் எறிகணைத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இத் தாக்குதல்கள் நேற்று காலை 6.30 மணி தொடக்கம் 8 மணி நேரம் வரை தொடர்ந்து இடம் பெற்றுள்ளது. வாகரை மருத்துவமனைக்கு அண்மித்ததாகவும் கதிரவெளி, கண்டலடி, பாற்சேனை, வம்மிவெட்டுவான், வெள்ளையடி மடு ,ஊரியன்கட்டு ஆகிய கிராமங்களின் மீதும் எறிகணைகள் செறிவாக வீழ்ந்து வெடித்துள்ளன.

இத் தாக்குதலினால் பொது மக்களின் சொத்துக்களுக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## கண்காணிப்புக்குழு விசாரணை

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வர்த்தக கப்பலையும் அதன் பணியாளர்களையும் விடுவிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை பேச்சுவார்த்தை முயற்சிகளை அடுத்து அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ச-133)

## முல்லைத்தீவு கடற்பரப்பில் தத்தளித்த ஜோர்தானிய கப்பல் புலிகளினால் மீட்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அருகே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்பரப்பினுள் நேற்று முன்தினமிரவு இயந்திர செயற்பாட்டை இழந்த நிலையில் நுழைந்த ஜோர்தான் நாட்டு சரக்கு கப்பலை கடற்புலிகள் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து தென்ஆபிரிக்காவிற்கு 14 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை ஏற்றிச்சென்ற ஜோர்தானியில் பதிவு செய்யப்பட்ட பர்ஹா என்ற சரக்கு கப்பலே புலிகளால் இவ்வாறு மீட்கப்பட்டது.

இதனையடுத்து இந்த கப்பலில் ஏறிய கடற்புலிகள் கப்பலில் இருந்த கப்டன் உட்பட 25 பேரையும் பாதுகாப்பாக மீட்டு கரைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். கப்பலும் கரைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஆனால் இயந்திரக் கோளாறால் சிக்கிய மேற்படி கப்பலையும் மாலுமிகளையும் விடுதலைப்புலிகள் கடத்தியுள்ளனர் என்றும் கப்பலையும் மாலுமிகளையும் காப்பாற்றும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

இந்தியாவின் ஆந்திர மாநிலம் காக்கிறா டாவில் இருந்து தென்னாபிரிக்காவின் டர்பன் நகருக்கு அரிசியை ஏற்றியவாறு சென்றி கொண்டிருந்த போது கப்பலின் இயந்திரங்கள் செயலிழந்தன. இதனால் நடுக்கடலில் தத்தளித்த கப்பல் அப்பகுதியில் நிலவிய கடற்கொந்தளிப்பு காரணமாக புலிகளின் கட்டுப்பாட்டில் (03 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதியின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் தயாரில்லை

(சென்னை)

இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அக்கறை செலுத்த தமிழ் நாட்டு முதலமைச்சருக்கு எதுவித உரிமையும் இல்லையெனவும் அவரது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு தயாராகவில்லையெனவும் அரசின் தகவல் பிரிவு தெரிவித்ததாக திவயின செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிராக படையினரால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தல் மற்றும் ஏ-9 வீதியைத் திறத்தல் குறித்த கோரிக்கைகளை நிறைவேற்றும்படி இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்தியா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளதை அடுத்தே அரசு மேற்படி தெரிவித்துள்ளது என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள. (ஏ-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னாள் எம்.பி. காலமானார்



(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரான வி.நவரத்தினம் (வயது-97) காலமானார்.

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் உள்ள மொன்றியல் நகரில் நேற்று மாலை 4.10 மணியளவில் அவர் காலமானார்.

யாழ்.கரம்பனில் 1910 ஒக்டோபர் 18 ஆம் திகதி பிறந்த நவரத்தினம் இலங்கைச் சட்டக் கல்லூரியில் பயின்றார்.

58 ஆண்டு காலம் சட்டத்தரணியாக அவர் பணியாற்றினார். யாழ்.ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் அவர் பதவி வகித்துள்ளார். (எ-5)

# புத்திஜீவிகள் குழுவின் யோசனைகளை பரிசீலித்து பொதுவான திட்டமொன்றினைத் தயாரிப்போம்

## சர்வகட்சி ஆலோசனைக் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

புத்திஜீவிகள் குழு வெளியிட்டுள்ளஇனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான நான்கு யோசனைகளையும் எதிர்வரும் சர்வகட்சி ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது பரிசீலித்து பொதுவான திட்டமொன்றினை அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் தயாரிப்போம்.

அந்தத் திட்டத்தை இனப்பிரச்சினைத் தீர்வுக்காகச் சமர்ப்பிக்கும் போது ஜே.வி.பியினரும் ஜாதிக ஹெலஉறுமயவினரும் எதிர்ப்புத் தெரிவித்தால் அது பாரிய எதிர்ப்பாக அமையாது. காரணம் தற்போது சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் ஐ.தே.கவினரும் அங்கம் வகிக்கின்றனர் என்று அமைச்சரும் சர்வ கட்சி ஆலோசனைக் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக யோசனை ஒன்றைத் தயாரித்து வழங்குவதற்குப் புத்திஜீவிகளுக்கு முழுமையான அதிகாரமும் வழங்கப்பட்டது.

புத்திஜீவிகள் குழுவினர் தமது கடமையை மீறி செயற்பட்டுள்ளனர் என சில கட்சிகள் குற்றம் சாட்டுவதில் எந்தவிதமான அடிப்படையும் இல்லை என்றும் அவர் கூறினார்.

புத்திஜீவிகள் குழுவின் யோசனைகள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சர்வ கட்சி ஆலோசனைக் குழுவில் கலந்து கொள்வதில்லைஎன்று ஜே.வி.பியும் ஜாதிக ஹெலஉறுமயவும் தெரிவித்துள்ளன. ஆனால் அந்த இரு கட்சிகளையும் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

காரணம் எதிர்வரும் சர்வகட்சி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஐ.தே.கவும் கலந்து கொள்ளவுள்ளது. இந்த நிலையில் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டால் மேற்படி இரு கட்சிகளினதும் ஆதரவு கிடைக்காவிட்டாலும் குறிப்பிட்ட யோசனை அங்கீகரிக்கப்படும் சாத்தியம் உள்ளது என்றார்.(ச-5)

# இலங்கைக்கான நிதியுதவிகள் இந்தோனேசியாவுக்கு திரும்பியது

இலங்கை யுத்த நடவடிக்கையால் 19 மில்லியன் யூரோப் பணம் இந்தோனேசியாவுக்குத் திரும்பியுள்ளது.

ஜேர்மனியின் அபிவிருத்தி அமைச்சர் கெடிமாறி விக்கோறிக் சியோல் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில், ஆசியாவில் சுனாமியின் தாக்கத்துக்குட்பட்ட நாடுகளில் இலங்கை மிக அதிகளவில் தாக்கத்துக்குள்ளாகிய நாடு எனவும் தற்போது தமிழர் பகுதிகளில் மீள நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாகக் கொழும்பு அரசாங்கத்திற்கு மேலதிக வாக்குறுதிகளோ நிதியுதவிகளோ வழங்கப்பட மாட்டாது என்று தெரிவித்தார்.

இதேபோன்று மேற்குலக நாடுகளும் செயற்படுமாயின் அது வரவேற்கத்தக்கதாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் கட்டடங்கள் கட்டவெனவும் மற்றும் கல்வி நடவடிக்கைக்காக எனவும் ஒதுக்கவிருந்த 19 மில்லியன் யூரோ பணம் இந்தோனேசியாவின் ஆச் பகுதிக்கு திருப்பப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# நான்கு கடைகள் கடவத்தையில் தீக்கிரை

கொழும்பு கண்டி பிரதான பாதையில் உள்ள கடவத்தை நகரில் நேற்றுச்சனிக்கிழமை அதிகாலை வேளையில் நான்கு கடைகள் தீயினால் சேதமடைந்துள்ளதாக கடவத்தை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே.டி.சோமபால தெரிவித்தார். நேற்று அதிகாலை 3.50 மணியளவில் கடவத்தை நகரில் கடைகள் திடீரென தீப்பிடித்து எரிவதாக கடவத்தைப் பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தகவல் கிடைத்துள்ளது. இத் தகவலையடுத்து பொலிஸார் உடனடியாக தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவித்து விட்டு ஸ்தலத்துக்குச் சென்றுள்ளனர். (ச)

# இளம் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

(சாவகச்சேரி)

கச்சாய் கொடிகாமம் பிரதேச சபைக்கு அண்மையில் நேற்று மாலை 3.45 மணியளவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் தவசிக்குளத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன் (வயது-30) என்ற இளம் குடும்பஸ்தர் ஆவார்.

குறித்த இளம்குடும்பஸ்தர் நண்பர் ஒருவருடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த ஆயுததாரிகள் சுட்டுக் கொன்று விட்டுச் சென்றதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் அ.பிறேம்சங்கர் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறுகொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# யெகோவாவின் சாட்சி விசேஷ மாநாடு

(யாழ்ப்பாணம்)

யெகோவாவின் சாட்சிகளுடைய ஒரு நாள் விசேஷ மாநாடு இன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். 'கடவுளுடைய வார்த்தையை அறிவிப்பதில் அதிக ஆர்வம் காட்டுங்கள்' எனும் பொருளில் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படவுள்ளது. (ச)

# பாடநூல்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட ஒரு தொகுதி பாடசாலை பாடநூல்கள் நேற்று யாழ்.அரச அதிபரினால் யாழ்.கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எடுத்துவரப்பட்ட ஆயிரத்து மூன்று பொதிகளில் நேற்று 928 பொதிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மீதி 75 பொதிகள் இன்று கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படும் எனவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (ச-5)

# துணைவேந்தர் கடத்தப்பட்டமைக்கும் தமக்கும் தொடர்பு இல்லையாம்!

## கருணா தெரிவிப்பு

(லண்டன்)

பொதுமக்கள், புத்திஜீவிகள், பேராசிரியர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் கடத்தப்படுவதற்கும் மிரட்டப்படுவதற்கும் தமது அமைப்பு தொடர்பு படவில்லை என விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகிச் சென்ற கருணா தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி.தமிழோசைக்கு பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் காரணமாக புத்திஜீவிகள் வெளிநாடு சென்றுள்ளார்கள். ஆகவே இங்குள்ளவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

ஆகவே துணைவேந்தர் கடத்தப்பட்டமைக்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை. நாம் இராணுவத்துடன் சேர்ந்தியங்கவில்லை. அதேவேளை இராணுவம் எமக்கு ஆட்களைச் சேர்த்துத் தரவேண்டிய தேவையும் அவர்களுக்கு இல்லை என தனது செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார். (எ-133)

# கஷ்டப் பிரதேசத்தில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

அடையாளம் காணப்பட்டுள்ள மிக கஷ்ட, கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்வியமைச்சினால் விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை கருத்திற் கொண்டு இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சிபார்சினை தேசிய சம்பள ஆணைக்குழு வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் மிகவும் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு 2ஆயிரத்து 500 ரூபாவும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளின் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில மாகாணங்களிலுள்ள இத்தகையப்பிரதேசப் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு இவ்விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பாலாவின் மறைவு ஏற்படுத்தும் கவலைகள் தினமணி நாளிதழின் கட்டுரையில் தெரிவிப்பு



(நேற்றைய தொடர்ச்சி...)

அந்த பிரான்ஸ் நிருபர்கள் சென்னை திரும்பியதும் சென்னையில் சில பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளிக்கவும் ஏற்பாடு செய்தார் அவர்.

1987ஆம் ஆண்டு ராஜீவ் காந்திக்கும் ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் இந்திய-இலங்கை உடன்பாடு உருவாகும் தருணத்தில் மிக்க கவனமாக நிருபர்களிடம் பேசியவர் பாலசிங்கம்.

பத்திரிகையாளராக இருக்கின்றேன்.பத்திரிகைகளின் போக்கு, அணுகுமுறை, அவர்களது செய்தித் தேவை குறித்து நன்றாக அறிவேன். அதேசமயம் தமிழ் மக்களின் துயரத்தை எப்படி பத்திரிகைகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதும் தெரியும் என்று ஒருமுறை குறிப்பிட்டுள்ளார்.

1987 ஆம் ஆண்டு இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிடும் சூழல் கனிந்து வரும் சமயத்தில் இந்திய அரசுடன் தொடர்பு கொண்டவர்களில் பாலசிங்கம் குறிப்பிடத்தக்கவர்.

ராஜீவ் காந்தியை பிரபாகரன் டில்லியில் சந்தித்த போது இருவருக்கும் இடையே பாலமாகவிருந்தவர் பாலசிங்கம். அந்தத் தருணத்தில் சென்னையில் இருந்தபோது பாலசிங்கத்திடம் ஒருமுறை நிருபர்கள் தமிழீழத்தைப் பெற்றுத் தரவேண்டும் என்று வலியுறுத்துவீர்களா? என்று கேட்டனர்.

ஈழத் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் எந்தத் தீர்வுமே ஏற்கத் தக்கது. இதுதான் வேண்டும் என்று இப்போது வலியுறுத்த மாட்டோம் என்றார் அவர்.

2002 ஆம் ஆண்டில் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு இருதரப்பினருக்கும் நேரடிப் பேச்சுவார்த்தை தொடங்கத் திட்டமிடப்பட்டது. பாலசிங்கத்தின் உடல் நிலையைக் கருதி இந்தியாவில் தங்கி அவர் சிகிச்சை பெற்றபடி பேச்சுவார்த்தையை நடத்தலாம் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டது.

பாலசிங்கத்துக்கு மனிதாபிமான அடிப்படையில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யலாம் என்று அப்போதையை பிரதமர் வாஜ்பாய் கருத்துத் தெரிவித்தார்.

ஆனால் இந்த யோசனை கடைசியில் ஏற்கப்படவில்லை. இதையடுத்து தாய்லாந்து, நோர்வே, யப்பான்ஆகிய நாடுகளில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

போராளிகளாகவும் தீவிரவாதிகளாகவும் சித்திரிக்கப்பட்டு வரும் விடுதலைப்புலிகளுக்குப் பாலசிங்கத்தின் மறைவினால் நல்ல வழிகாட்டி, சித்தாந்தவாதியை இழந்து விட்டோம் என்ற கவலை ஏற்பட்டுள்ளது.

புலிகளை அரசியல் தீர்வுக்கு இட்டுச் செல்லவும் அரசியல் ஆலோசனை கூறி வழிப்படுத்தவும் மூத்த தலைவர் இப்போது இல்லாததால் புலிகள் எத்தகைய செயலில் ஈடுபடுவார்களோ என்ற கவலை சிலருக்கு ஏற்படும்.

அரசியல் ராஜதந்திரத்தைக் கையாள புலிகள் தரப்பில் முக்கியமானவர் இல்லையே என்ற கவலையை இப்போதைய வெற்றிடம் இலங்கை அரசுக்கும் ஏற்படுத்தும். (முற்றும்)(ச)

# எம்.ஜி.ஆர் நினைவு தினம்

யாழ்.குடாநாட்டில் இந்தியாவின்முன்னாள் முதலமைச்சர் அமரர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 19 ஆம் ஆண்டு நிகழ்வு நாளும் அனைத்துலக எம்.ஜி.ஆர்.பேரவை முன்னாள் தலைவர் அமரர் பொன்.மதிமுக ராஜாவின் 8 ஆம் ஆண்டு நினைவு தினமும் சுனாமியின் 2 ஆம் ஆண்டு நினைவு நாட்களும் இம் மாதம் 24,25,26 ஆம் திகதிகளில் யாழ்.குடாநாட்டில் நடைபெறுவதற்கு அனைத்துலக எம்.ஜி.ஆர்.பேரவை ஒழுங்கு செய்துள்ளது. (எ)

# அங்கத்தவருக்கு 2கிலோ வீதம் மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அங்கத்தவருக்கு 2கிலோ மா என்ற அடிப்படையில் குடும்ப அட்டைக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

அவ்விநியோகத்துக்காக சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மா விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை லிப்பூல் கப்பல் மூலம் மா மற்றும் அரிசி எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவித்தார். (ச-5)

செய்ய வேண்டியதை செய்ய முயலுங்கள். முயன்றால் செய்ய வேண்டியது இதுவென்பதில் சந்தேகம் ஏற்படாது.
—ஆவ்பரி

வலம்புரி

# இந்தியாவின் நேரடி தலையீடு தேவை

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நேரடித் தலையீடு இருக்க மாட்டாது என இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அதேநேரம் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்குமென இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் உறுதிப்படக் கூறியுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சரினதும் பிரதமரினதும் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரண்பாடாகவிருப்பினும் ஈழத் தமிழர்களுக்கு விரைவில் விடிவு கிடைக்கும் என தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறியிருப்பது நம்பிக்கை தருவதாகவுள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் நோர்வேயின் அனுசரணைப் பணி தோல்வியில் முடிபுற்றுப் போனது.

இவ்விதம் நோர்வேயின் சமாதான அனுசரணைப் பணி தோல்வியில் முடிபுற்றுப் போவதற்கு இந்தியாவின் அமைதியும் காரணம் என்றே கூற வேண்டும்.

இலங்கை விவகாரத்தை நோர்வே அரசு உடனுக்குடன் இந்தியாவுக்குத் தெரிவித்த போதிலும் அது விடயத்தில் இந்தியா கடைப்பிடித்த மெத்தனப் போக்கு நிலைமையை மோசமாக்கியது மட்டுமன்றி இந்தியா மீது இருந்த பயமும் இலங்கைக்கு அற்றுப் போனது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் மௌனம் சிறந்த ராஜதந்திரமாக இருக்க மாட்டாது என இந்தியப் புலனாய்வுத்துறையின் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை விடயத்தில் இந்தியா மிக இறுக்கமான போக்கைக் கொண்டிருந்திருக்குமாயின் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கோ அன்றி ஏ-9 பாதைக்கோ பங்கம் வந்திருக்க மாட்டாது.

எதுவாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்தமை புதிய திருப்பம் என்றே கூற வேண்டும்.

ஏற்கனவே ஒரு தடவை இந்தியப் பிரதமரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்க முற்பட்ட போதிலும் அது சாத்தியமற்றுப் போய்விட்டது.

அதற்குள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது என்பது இப்போது உறுதியாகிவிட்டது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோபாலசாமியைச் சந்தித்து அவருடன் தங்கி நின்றதனால் கலைஞர் கருணாநிதிக்கு அது அவ்வளவு திருப்தியைத் தரவில்லை.

அதனால் தன்னைச் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்க மறுத்த கலைஞர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்கும் முட்டுக்கட்டைப் போட்டிருந்தார்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. கலைஞர் கருணாநிதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன் சிங்குடனும் சந்திப்பு நடந்துள்ளது.

இச் சந்திப்பில் ஈழத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்குமென பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இப்போதைக்கு இது ஆறுதல் தருவதாகவே இருந்தாலும் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நேரடித் தலையீடு அவசியமானது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

# 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முன்னிலைப் பெறுபேறுகள் சில

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பெறுபேறுகள் வருமாறு,

சு.வித்தியாசாகர்(185), இ.சிவேஸ்வரன்(168), கௌ.லோகீசன் (168), செ.லவின் (168), ஆ.மிதுனா (167), ப.கதிர்தர்ஷினி (166), பா.ஆதீவன் (165), ச.பானுஜா(164), தி.பிரசாந்தன் (164), மு.பவித்ரா (162), ம.அருண்முகன்(160), செ.சர்வாண்ஜா(160), சி.மிதுஷன்(159), நி.நிரோஜன்(159), சி.சர்வக்ஞன்(158), க.நிதுஷ்யன் (158), செ.கவிதா (157), செ.சாவித்யா(155), நா.சிந்துஜன்(155), இ.ஜயராமன்(154), தி.ஜனுசா (154),

க.கௌதம் (152), கி.சண்முகேசன் (151), ச.மாதுலா(151), பு.சஞ்சுதன் (151), கு.பிரியதர்ஷன் (150), ம.ஜிவஹாசன்(150), ஸ்ரீ.நிஷனன் (150), க.அனோபன் (149), ச.கஜந்தன்(149), ர.புரோணியா(149), ஏ.திவ்யா(148), கு.சுயானி(148), சி.பிரசாந்(147), வ.ஷங்கவி(147), க.நிஷாந்தன்(147), ஜே.ஐங்கரன் (147), கோ.பிரசாந்(147), அ.சிந்துஜா(146), சி.புருசோத்(146), த.கீர்த்தனராம்(146), ச.கபிலன்(146), த.தானுஷன் (146),

ஸ்ரீ.ஸ்ரீசங்கமீரா(146), ச.சபேஷன் (145), பா.ஜிந்துஜன் (145), ஜெ.கிஷானா (145), ப.கஜலக்ஷன் (145), அ.அனுஷன்(145), சி.கீதாஜினி(145), சு.நரேந்திரன்(144), மு.கபிலன்(144), வி.மிதுஷன்(144), ஆ.யதுர்ஷன்(143), ந.வேதாசினி(143), சி.யாழமுதன் (143), தி.கிருத்திகா(142), ஜெ.ஜகதீஸ்வரன் (142), ச.கிருத்திகா(142), த.சுஜீவன் (141), ஸ்ரீ.நிரோஜிதன்(141), ர.ஷர்மிஜா(141), ஜெ.சிவகஜன்(141), கு.விதுஷன் (140), க.லக்சுமன்(140),

ஈ.சேயோன்(139), சி.பிரவீணா (139), கு.பிரசாந்(139), சி.நிதர்ஷன் (139), சி.நிலக்ஷன் (139), சு.சுநயனி(139), சி.நிரோஜன் (138), சி.லக்ஷன் (138), இ.லாவண்ஜா(138), வி.வைகரன்(138), ஸ்ரீ.ரதீஷன் (138), பா.நிருத்திகா(138), யோ.துசாரா(138), கி.தரணிகா(138), ஸ்ரீ.மிதுஷன் (137), பே.கவியரன் (137), பா.விவின்சன் (137), ச.கிரிசான் (136), கு.குணசிகா (136), சி.திலக்ஷனா(136), பா.அனுசாந்த்(136), வி.விதுஷன் (136), கோ.கார்மேகன்(136),

தே.சுதேஷன் (135), சு.தாருஜா (135), செ.சுகன்ஜா(135), லோ.நிரூஷன் (135), லோ.சுலக்ஷன் (134), த.கீர்த்திகன் (134), வே.சஜீவன் (134), ந.பபிகரன் (134), சி.அரவிந்(134), மு.லக்ஷனா (134), ஜெ.தயானி (134), கி.கஜன்(133), ப.பகீஷன் (133),அ.சாருக்ஷன் (133). (ச-133)

# யாழ்.மக்களுக்கான உணவுப் பொருள்கள் விமான மூலம் நேற்று எடுத்து வரப்பட்டன

யாழ்.மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், சிறுபிள்ளைகளுக்கான பால் மா வகைகள், மருந்துப் பொருள்கள் உட்பட ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்கள் நேற்று விமானம் மூலமாக எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த அரசாங்கப் பிரதிநிதிகள் அப் பிரதேசத்தின் அரச அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதன் விளைவாக எடுக்கப்பட்ட முடிபின் பிரகாரம் குறித்த பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

குறித்த கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட முடிபின் பிரகாரம் தற்போதைக்கு 24 மணிநேரமும் யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன் அதற்குத் தேவையான மின் பிறப்பாக்கிகள் உட்பட்ட கருவிகள் யாழ்ப்பாணத்திற்கு வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தேவையான போக்குவரத்து, நெடுஞ்சாலை, தொடர்பாடல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தும் வகையில் ஜாதிக சவிய (தேசிய சக்தி) திட்டத்தின் கீழான செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள உணவுத் தொகுதியில் நெஸ்ரமோல்ட் மா ரின்கள் 2 ஆயிரத்து 800, 10 ஆயிரம் முட்டைகள், மாமையிட் சத்துணவு 2 ஆயிரத்து 800, சஸ்ரஜன் பால் ரின்கள் 300, 10 லட்சம் பனடோல் வில்லைகள் மற்றும் சிறுவர் பனடோல் வகைகள், பிஸ்கட் உள்ளிட்ட உணவுப் பொருள்கள் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாண மக்களின் புகையிலை, சின்ன வெங்காயம் போன்ற விவசாய உற்பத்திப் பொருள்களை கொழும்புக்குக் கொண்டு வருவதற்கான விசேட ஏற்பாடுகளும் தற்போதைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இப் பொருள்கள் சிக்கின்குனியா நோயினால் பாதிக்கப்பட்ட வயோதிபர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்தி புத்தாண்டில் புலிகள் பேச்சுக்கு வர வேண்டும்

## பாலித ஹோகன்ன அழைப்பு

(கொழும்பு)



மலரவுள்ள புத்தாண்டில் விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அரச சமாதான செயலகம் சார்பில் நான் அழைப்பு விடுக்கின்றேன்.

கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து விட்டு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டால் நிச்சயம் 2007 ஆம் ஆண்டு எமது நாட்டில் சமாதானம் மலரும் என்று அரச சமாதானச் செயலகத்தின் செயலாளர் கலாநிதி பாலித ஹோ கன்ன தெரிவித்தார்.

சமாதானச் செயற்பாடுகளின் தற்போதையை நிலைமை தொடர்பாக கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது;

நாட்டின் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலமே தீர்த்து வைக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. அரசாங்கம் சமாதான செயற்பாடுகளில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடனேயே செயற்படும்.பாதுகாப்புக் காரணங்களுக்காக சில நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயாராகவேயிருக்கின்றோம்.

எதிர்வரும் நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடத்தைக் கருத்திற் கொண்டு விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஆர்வம் காட்ட வேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன். புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிடுவதாக அறிவித்தால் அதுகுறித்த அரசாங்கம் உடனடியாக சாதகமான பதிலை அறிவிக்கும் என்றார். (ச-5)

# பயங்கரவாத தடுப்பு அமைதிச் சபை கவலை

புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சரத்துக்கள் குறித்து தேசிய அமைதிச் சபை கவலை தெரிவித்துள்ளது. அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சரத்துக்களானது இராணுவத்தினரின் மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும். அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இடையேயான இடைவெளியை அதிகரிக்கும். புலிகளின் மனித உரிமை மீறல்களைத் தடுக்காது.

திருகோணமலை பிரதேசத்திலிருந்து சிங்களவர் வெளியேற்றமானது பிரச்சினை இன்னமும் ஆழமாகச் செல்கிறது என்பதையே வெளிப்படுத்துகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அனைத்துக் கட்சி வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை நாம் வரவேற்கின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# முல்லைத்தீவு கடற்...

உள்ள முல்லைத்தீவுக் கடற்பரப்புக்குள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நுழைந்தது.

இதனையடுத்து கப்பலுக்குள் ஏறிய கடற் புலிகள் கப்பலை பாதுகாப்பாக கரைசேர்ந்தனர்.

கப்பல் இயந்திரக் கோளா றால் சிக்கியுள்ளது என்றும் அதில் கடற்புலிகள் ஏறியுள்ளனர் என்றும் இங்கிலாந்தின் பால்மவுத்தீவில் உள்ள கடல் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு உடனடியாக கப்பலில் இருந்தவர்கள் தகவல் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து மேற்படி கப்பல் புலிகளின் பகுதிக்குள் நுழைந்த விடயம் தெரியவந்தது. இது குறித்து உடனடியாக பிரித்தானியாவின் கடல் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் இலங்கை கடற்படையினருக்கு தகவல் அனுப்பினர்.

கப்பலுடன் தொடர்புகொள்ள கடற்படையினர் முயன்றபோதும் அந்த கப்பலுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதாக கடற்படையினர் தெரிவித்தனர். (ச)

19 ஆம் ஆண்டு நினைவு நாள்



எம்.ஜி.இராமச்சந்திரன்
முன்னாள் முதலமைச்சர்.தமிழ் நாடு.

1ஆம் நாள் (ஞாயிற்றுக்கிழமை)
24.12.2006

நல்லவர்கள் வாழ்வதில்லை–இது
நானிலத்தின் தீர்ப்பு !

அனைத்துலக எம்.ஜி.ஆர்.பேரவை
தலைமை விழா ஏற்பாட்டுக் குழு.

(C-703)

08 ஆம் ஆண்டு நினைவு நாள்



போன்.மதிமுகராஜா
முன்னாள் அனைத்துலக எம்.ஜி.ஆர்.பேரவை தலைவர்

# வடக்கு–கிழக்கு நிர்வாகம்...

வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு சட்டரீதியற்றது என்று உயர் நீதிமன்ற தீர்ப்பையடுத்து நேற்று முன்தினம் முதல் வடக்கு கிழக்கு மாகாண சபைகளின் நிர்வாகம் பிரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கிழக்கு மாகாணத்துக்கான ஆளுநராகவும் வடக்கு மாநிலத்திற்கான பதில் ஆளுநராகவும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிர்வாகப் பிரிப்பினால் வடக்கு கிழக்கு மாகாணசபைகளின் நிர்வாக அலகுகள் வடக்குத் தனியாகவும் கிழக்குக்குத் தனியாகவும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட நியமனங்கள் வருமாறு;

**பொதுச்சேவைகள் ஆணைக்குழு**

வடக்கு மாகாண செயலாளர் செல்வி.தெ.விஜயலக்சுமி,கிழக்கு மாகாண செயலாளர் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணச் செயலாளர் வே.பொ.பாலசிங்கம்.

**கல்வி அமைச்சு**

வடக்கு மாகாணத்தின் செயலாளர் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம். இவரே வடக்கு மாகாணத்தின் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட் டுள்ளார். கிழக்கு மாகாணத்தின் செயலாளர் முன்னாள் திருமலை மாவட்ட அரச அதிபர் றொட்றிக்கோ.

**விவசாயம், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு**

வட மாகாணத்தின் செயலாளர் எஸ்.மக்ரூஸ், கிழக்கு மாகாணத்தின் செயலாளர் எஸ்.சுவாமிநாதன்

**மாகாண சபையின் பிரதம செயலாளர்**

வடக்கு மாகாண சபை எஸ்.ரங்கராசா,கிழக்கு மாகாணசபை–நியமிக்கப்படவில்லை.

**சுகாதார அமைச்சு**

வடக்கு மாகாண செயலாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை .கிழக்கு மாகாண செயலாளர் சிறிவர்த்தனா. இவரே கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**மாகாண பிரதம செயலாளர் (நிதி)**

வடக்கு மாகாணசபை எஸ். செல்லத்துரை, கிழக்கு மாகாண சபை மகாலிங்கம்.

**ஆளுநரின் செயலாளர்**

வடக்கு மாகாண சபை அமிர்தலிங்கம். இந் நியமனங்களுக்கு அமைவாக நிர்வாகச் செயற்பாடகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்டியே நியமனங்கள் இடமாற்றங்கள் பதவி உயர்வுகள் என்பன வழங்கப்படவுள்ளன.

இதனிடையே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி வடக்கு கிழக்கில் மூன்று நிர்வாக அலகுகள் ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு கிழக்கு மற்றும் திருகோணமலை என்ற பிரிவுகளே இந்த மூன்று பிரிவுகளும் அமையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5,133)

யாழ் மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்
முக்கிய அறிவித்தல்

வெதுப்பகங்கள் ஊடாக கேக் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக அரச அதிபரால் கேக் உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்படவுள்ளதால் சகல அங்கத்தவர்களும் இன்று முற்பகல் 10.30 மணிக்கு தவறாது சங்கத்துக்கு சமுகமளிக்கவும்.

1 Kg கேக்கின் விற்பனை விலை 350/=

குறிப்பு: இன்று மட்டும் வழங்கப்படும்.

இல. 183 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி ,
யாழ்ப்பாணம். -செயலாளர்.

(C-575)

2006 O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!

உங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை "சீபி" இல் கணினிக் கல்வியுடன் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்.

உங்கள் பதிவுகளை இன்று முதல் எமது நிறுவனத்தில் மேற்கொள்ளலாம்.

Batch Starts On 01.01.2007 (Monday)

மேலதிக விபரங்களுக்கு நேரில்.


CB Computer Academy

T.P.No.021 4590291 (C-573) Station Road, Kondavil

## 44 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அழகர்சாமி சரவணகுமார் (சரவணா)

24.12.2006 ஞாயிற்றுக்கிழமை



மரணம் வந்து முத்தமிட விழிமூடிப் போனாய் சரவணா!
நாற்பத்தைந்து நாட்கள் உன்முகம் காணாத விழிகள் கண்ணீரில் கரையுதுபார்?
நேற்றுவரை நீ நேரிலிருந்தாய் கண்களிலே சரவணா!
பூத்தது போற் பூத்துப் புன்னகைத்தாய் எங்களுடன் சரவணா!
பேசிக்களித்தாய் போய்விட்டாய் எமைவிட்டு சரவணா!
ஈரவிழியிங்கு எமக்கின்னும் காயவில்லையே சரவணா!
மீளாத்துயில் மீண்டு மீள வரமாட்டாயா சரவணா!
எங்கள் ஆத்மா உள்ளவரை உங்கள் நினைவேந்தி
எங்கள் உள்ளக் கமலங்களில் பூஜிப்போம் உந்தனையே ... !

மறைவு:
11. 11. 2006

வீட்டுக்கிருத்திய நிகழ்வு 24.12.2006 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து இவ் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

37, பிரப்பன்குளம் வீதி,
யாழ்ப்பாணம். -குடும்பத்தினர்.

குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-702)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.